**முதல்வர் அலுவலகம், அரசினர் பொறியியற் கல்லூரி, தருமபுரி - 636 704**
**முதல்வர்**
**சுற்றறிக்கை எண்.2166/டி1/2023 நாள்: 05.09.2023**

பொருள்: மாணவர் பிரிவு - அரசினர் பொறியியற் கல்லூரி, தருமபுரி - 636 704 - இக்கல்லூரியில் பி.இ (B.E) முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு 11.09.2023 அன்று முதல் கல்லூரி வகுப்புகள் தொடக்கம் - தகவல் தெரிவிப்பது - தொடர்பாக.

*******

இக்கல்லூரியில் பி.இ (B.E) முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் 11.09.2023 அன்று முதல் முதலாம் ஆண்டு (முதல் பருவம்) வகுப்புகள் தொடங்க உள்ளது. எனவே 11.09.2023 அன்று காலை 9.30 மணிக்கு இக்கல்லூரியில் முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து மாணவ/மாணவியர்களும் தங்களின் பெற்றோர்களுடன் இக்கல்லூரி வளாகத்திலுள்ள அப்துல் கலாம் கலையரங்கத்தில் இக்கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெறும் முதலாம் ஆண்டு வகுப்புகள் அறிமுக விழாவில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் 11.09.2023 அன்று மேற்படி அறிமுக விழா நிறைவு பெற்றதும் மாணவ/மாணவியர்களுக்கான விடுதி சேர்க்கை (Hostel Admission) நடைபெறும் எனவும் விடுதி வசதி தேவைப்படும் மாணவ/மாணவியர்கள் விடுதி கட்டணம் செலுத்தி விடுதியில் சேர்ந்துக் கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. விடுதி கட்டணம் தொடர்பான விவரங்கள் கல்லூரி இணையதளத்தில் (**Website - www.gcedpi.edu.in**) தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**பெறுநர்:**

முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்றுள்ள அனைத்து
மாணவ/மாணவியர்கள் மற்றும் மாணவ/மணவியர்களின்
பெற்றோர்கள்

05/09/23

**முதல்வர்**
அரசினர் பொறியியற் கல்லூரி,
செட்டிக்கரை, தருமபுரி–636704

நகல்: முதல்வர் மேஜை
நகல்: துணை முதல்வர்,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
அமைப்பியல் துறை.
நகல்: அனைத்து துறைத்தலைவர்கள்
நகல்: முனைவர்.எம்.செந்தில்குமார்,
முதலாம் ஆண்டு முதன்மை ஆலோசகர்,
வேதியியல் துறை.
நகல்: முனைவர்.ஜா.செ.மிராக்ளின் ஜாய்ஸ் பமீலா/இணைப்பேராசிரியர்
கணினி அறிவியல் மற்றும் பொறியியற் துறை
(கல்லூரி இணையதளத்தில் பதிவிடும் பொருட்டு)
நகல்: முதலாம் அனைத்துத் துறை பொறுப்பு ஆசிரியர்கள்
நகல்: கல்லூரி அறிவிப்பு பலகைகள்
நகல்: விடுதி கண்காணிப்பாளர்கள்
விடுதி அறிவிப்பு பலகைகள்
நகல்: டி1/டி2/டி3/டி4 - இருப்பு கோப்பு

To
Mr. Alok kumar
8/9.